செ. கு. எண்:048 நாள் :26.02.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை –26.2.2014

சென்னை பெருநகரக் காவல், கோயம்பேடு பேருந்து நிலைய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.லாரன்ஸ் அவர்கள் 13.1.2014 அன்று அம்பத்தூர் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், பாலக்கரை போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.சொக்கலிங்கம் அவர்கள் 14.1.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், கூடலூர் வடக்கு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.செல்வேந்திரன் அவர்கள் 16.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், வீரகனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சந்திரன் அவர்கள் 18.1.2014 அன்று வீரகனூர் - தலைவாசல் சாலை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. V.மகேந்திரன் அவர்கள் 18.1.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், அம்பிளிக்கை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ராஜேந்திரன் அவர்கள் 19.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சந்தானகிருஷ்ணன் அவர்கள் 21.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 10-ம் அணியில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.ராஜ் அவர்கள் 23.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, ஆவடி, தமிழ்நாடு சிறப்பு காவல் படை 2–ம் அணி, 'அ' நிறுமத்தில் அவில்தாராக பணி புரிந்து வந்த F.மகபூப்பாஷா அவர்கள் 23.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.கண்ணன் அவர்கள் 29.1.2014 அன்று தெங்கியாநத்தம் ஓடை, கச்சிராப்பாளையம் - சின்னசேலம் சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் ராஜ்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் லாரன்ஸ், சந்திரன், ராஜேந்திரன், சந்தானகிருஷ்ணன்; தலைமைக் காவலர்கள் சொக்கலிங்கம், கண்ணன்; அவில்தார் மகபூப்பாஷா; இரண்டாம் நிலைக் காவலர் செல்வேந்திரன்; காவலர் மகேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9